# மே 28

# புனித ஜெம்மா கால்கானி

# (1878-1903)



ஆண்டவருடைய பாடுகள் மீது இவளுக்கு மிகுந்த பக்தி உண்டு. பெற்றோர் அளித்த பயிற்சியே இதன் காரணம். 9-ஆம் வயதில் புதுநன்மை வாங்கினாள். இயேசு அப்பொழுது இவளிடம் என்ன சொன்னார் என்று இவளால் விவரிக்க முடியவில்லை. என்றாலும் எப்பொழுதும் நல்ல பிள்ளையாக இருக்க இயேசுவுக்குக் கொடுத்த வாக்குறுதியை இவள் ஒருபோதும் மறந்தவள் அல்ல. இவளுக்கு பலவித வேதனைகள் வந்தன அத்தோடு மனநோயும் வந்தது. ஒரு நாள் நன்னை வாங்கிய பின் இயேசு இவளைப் பார்த்து “ஜெம்மா உன்னை நான் கல்வாரியில் எதிர்ப்பார்க்கிறேன். இதுவரை அந்த மலையை நோக்கியே நீ வழி நடத்தப்பட்டிருக்கிறாய்” என்றார். அவளுக்கு வந்த கொடிய நோயால் நெடுநாள் வேதனைக்குட்பட்டால் அதன்பின் என்றும் கன்னியாக இருப்பதாக கடவுளுக்கு அவள் வாக்களித்தாள். 1899ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் புனித மார்கரீத் மரியம்மாளை நோக்கி ஒரு நவநாள் தொடங்கப்பட்டது. ஜெம்மாவும் இந்த நவநாளில் சேர்ந்து கொண்டாள். புனித கபிரியேல் அதிதூதர் இவளுக்குத் தோன்றி இவளுடன் சேர்ந்து தாமும் நவநாள் செய்வதாக செபித்தார். தன் ஆன்ம குருவுக்கு இவள் ஆள் அனுப்பினாள். அவர் வந்து திவ்விய நன்மை கொடுத்தார். உடனே இவள் பூரண சுகம் பெற்றாள். கன்னியர் சபையில் சேர்வதாக இவள் வாக்களித்திருந்தாள். எனினும் இவள் பலவீனமாக இருந்தபடியால் சபையில்சேர முடியவில்லை. 1899ஆம் ஆண்டு இயேசுவின் திரு இருதய விழாவிற்கு முந்திய இரவில் இவளுடைய காவல் சம்மனகம் தேவதாயும் இவளைத் தாக்கிக் கொண்டிருக்கையில் இவள் நம் ஆண்டவரின் திருக்காயங்களைத் தன் உடலில் பெற்றுக் கொண்டாள். ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலையிலிருந்து வெள்ளிக்கிழமை பிற்பகுதி வரை திருக்காயங்களால் அவள் வேதனைப்படுவாள். தன் காவல்சம்மனசை இவள் அடிக்கடி கண்டு அவருடன் பேசுவாள். இவளது மன்றாட்டால் அநேகர் சுகம் பெற்றனர். பாவிகளுக்காகவும், சிறப்பாக தகுதியற்ற குருக்களுக்காகவும் இவள் தன்னையே பலிப்பொருளாக கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தார்.

சிந்தனை:

இயேசு தமது அன்பில் சிறியதை என் உள்ளத்தில் வைக்கும் வரை நான் இளைப்பாற மாட்டேன். இயேசுவை நேசி, வேறு ஒன்றும் வேண்டாம். (புனித ஜெம்மா கால்கானி)

செபம்:

ஆண்டவரே, உத்தம குருக்களை திருச்சபைக்கு நிரம்பத் தாரும்.